இலங்கைப் பாராளுமன்றம்

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் சபா பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளையும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அவதானிப்புகளைச் சமர்ப்பித்தல் மற்றும் நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4)இற்கு அமைவாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 183

நிறுவனத்தின் பெயர் : இலங்கைப் பாராளுமன்றம்

குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் / குழுவினால் இனங்காணப்பட்ட கட்டளைகள்		குறைபாடுகளைத் தவிர்ப்பதற்காக நிறுவனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் / பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் / தற்போதைய நிலைமை
01	கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட சகல கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உரிய காலப்பகுதிக்குள் பதில் வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் சில நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக அவ்வாறு மேற்கொள்ள முடியாமற் சென்ற சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் கணக்காய்வு அத்தியட்சகருக்கு எழுத்து மூலம் அறிவித்து நியாயமான கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
02.	2016 மார்ச்சு 31ஆந் திகதிய 2016 (5)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக பொருட் சுற்றாய்வினை மேற்கொண்டு உரிய திகதியில் ஏற்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பாராளுமன்ற நடவடிக்கைகளின் தன்மை மற்றும் காணப்படுகின்ற 09 திணைக்களங்களும் அதிகளவான பிரிவுகளைக் கொண்டிருத்தல் காரணமாக வருடாந்த பொருட் சுற்றாய்வு இடம்பெறுகின்ற போதிலும் குறித்த காலப்பகுதிக்குள் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதில் நடைமுறை ரீதியான சிரமங்கள் காணப்படுகின்றன. ஆயினும் 2022ஆம் ஆண்டளவில் கால தாமதம் பெரிதும் குறைந்துள்ளது.
03.	வருடாந்த பொருட் சுற்றாய்வில் வெளிவந்த மிகை, பற்றாக்குறை தொடர்பான பரிந்துரைகளை உள்ளிட்ட ஏனைய பரிந்துரைகள் உரிய காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மேற்குறிப்பிட்ட பதிலுடன் தொடர்புடையது.

04.	2016.12.29ஆம் திகதிய 2016 (30)ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகனங்களில் எரிபொருள் தகனமடைதல் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கோவிட் பெருந்தொற்று நிலை காரணமாக ஏற்பட்ட நடைமுறை ரீதியான சிக்கல்களினால் எரிபொருள் தகனப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாமல் போயிருப்பினும் 2023ஆம் ஆண்டில் இதனை செயற்படுத்துவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
05.	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுலையாக இருந்து வருகின்ற கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	பணித் தடைக்கு உள்ளான 03 உத்தியோகத்தர்களில் ஒரு உத்தியோகத்தர் தவணை அடிப்படையில் கடனைச் செலுத்த ஆரம்பித்துள்ளார். ஓய்வு பெற்ற அலுவலர்களில் ஒருவரிடமிருந்து 2023 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் தொடக்கம் கடனை அறவிடக் கூடியதாக இருக்கும். மற்ற நபரின் பணிக்கொடை செலுத்தல் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.
06.	மீளாய்வாண்டின் நிமித்தம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றுகை அறிக்கைகள் குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த திகதியில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
07.	2018.01.24ஆம் திகதிய 02/2008ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய முறையில் மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	மனித வள அபிவிருத்திக்கெனவே ஒதுக்கப்பட்ட அலுவலகமொன்று 2020.01.07ஆம் திகதி தாபிக்கப்பட்டதுடன், பாராளுமன்ற செயன்முறைக்குத் தேவையான ஆற்றல் விருத்தியின் பொருட்டு மனித வள அபிவிருத்தித் திட்டமொன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது.
08.	தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தின் மூலம் வருடமொன்றில் ஓர் ஊழியருக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களிலான மேலதிக பயிற்சி குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லை.	சகல ஊழியர்களினதும் பயிற்சிக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் போதியளவு பயிற்சிக் காலம் ஒதுக்கப்பட்டுள்ளது.
09.	ஒட்டுமொத்த பணியாட்டொகுதியையும் உள்ளடக்கும் வகையில் செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஒட்டுமொத்த பணியாட்டொகுதியையும் உள்ளடக்கும் வகையில் அந்தந்த பதவிகளுக்கு தொழில் விபரம்

	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயமானது முனைப்பழியுள்ள அபிப்பிராயமாக அமைந்திருந்தது.	தயாரிக்கப்பட்டு, முடியுமானவரை எல்லா பதவிகளுக்குமான கடமைப் பட்டியல் அந்தந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக செயற்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப ஏனைய பணிகளை மேற்கொள்வதற்கு வழிநடத்துதல் மற்றும் செயலாற்றுகையை மதிப்பிடுதல் மேற்கொள்ளப்படுகின்றன.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்